பக்கம் 170
வருடம் 23

DEPOSITION OF THE WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**Case No. STC.No.5/2024**
**prosecution witness: PW-3**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

**Accused absent. Petition filed.**
வாக்குமூலம்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாக்கியநாதன் | ஜாதி | : | |
| த/பெ. | : | இன்னாசி | தொழில் | : | மீன்பிடி |
| கிராமம் | : | தங்கச்சிமடம் | சமயம் | : | கிறிஸ்தவர் |
| தாலுகா | : | இராமேஸ்வரம் | வயது | : | 39. |

**<u>13.11.2024</u>**

**முதல் விசாரணை:-**

நான் தங்கச்சிமடத்தில் வசித்து வருகிறேன். கடல் தொழில் செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 19.09.2022ம் தேதி என் வீட்டின் பால்காய்ச்சு விழா வைத்திருந்தேன். அதற்கு என் தங்கை அ.சா.1 , அவரது கணவர் ஆகியோர் வந்திருந்தார்கள். அன்று மாலை 06.30 மணியளவில் பால்காய்ச்சும் விழா முடிந்து என் தங்கை, அவரது கணவர், குழந்தைகள் ஆகியோர்கள் அவர்களுக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் இராமேஸ்வரத்திற்கு சென்றார்கள். அப்போது தங்கச்சிமடம் தண்ணீர் ஊற்று அருகே வரும்போது ஒரு நான்கு சக்கர டிரக் வண்டி இண்டிகேட்டர், லைட் எதுவும் போடாமல் நின்றுகொண்டிருந்தது. அந்த டிரக் வண்டியின் பின்னால் என் தங்கையின் கணவர் இருசக்கர வாகனம் மோதி விபத்துக்குள்ளானது. என் தங்கை மற்றும் குழந்தைகளுக்கு சுமாரான காயங்கள் ஏற்பட்டது. என் தங்கையின் கணவருக்கு இடது கால், முகம் ஆகிய இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டது. பின்னர் காயம்பட்ட என் தங்கை, அவரது கணவர், குழந்தைகளை ஆட்டோவில் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

பாக்கியநாதன்

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.11.13 12:38:22 +0530

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**</u>

நான் தற்போது சொன்னது போலீசார் சொல்லிதான் சொன்னேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது தங்கை, அ.சா.2 எனது தங்கையின் கணவர் என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் தேதி எனது வீட்டில் புதுமனை புகுவிழா என்றால் சரிதான். புதுமனை புகுவிழா வந்துவிட்டு எனது தங்கை மற்றும் அவரது கணவர் வந்த இருசக்கர வாகனமானது நின்றுகொண்டிருந்த வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகத்தான் கேள்விபட்டேன் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டதை கேள்விபட்டு நான் போய் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றால் சரிதான். இந்த விபத்து சம்பந்தமாக எனது தங்கை இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இழப்பீடு பெறுவதற்காக எனது தங்கச்சியும், மைத்துனரும் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை தனியாக விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

பாக்கியராஜ்

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.11.13 12:38:28 +0530